இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *680/2021*

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 5343/2019-லிருந்து எழுகிறது)

யூனியன் ஆ.ப் இந்தியா ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

எ. அழகம் பெருமாள் கோன்
மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. நீ.பே.ம. (எம்.டி.) எண் 17290/2017-இல் பிறப்பிக்கப்பட்ட கற்றறிந்த தனியமர் நீதியரசர் அவர்களின் உத்தரவை உறுதிசெய்து, மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை, நீ.பே.மே. (எம்.டி.) எண் 907/2018-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் (மதுரை அமர்வு) பிறப்பிக்கப்பட்ட 29.08.2018-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்ததால் மனக்குறையுற்று, இம்மேல்முறையீடு இந்திய ஒன்றியத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. நீதிப்பேராணை மனுவைத் தீர்வுசெய்கையில், இதிலுள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட நீ.பே.ம. (எம்.டி.) எண் 17290/2017-இல் பிறப்பிக்கப்பட்ட 26.10.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம், ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை

வழங்கவும், இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து நான்கு வார காலத்திற்குள் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும் இதிலுள்ள மேல்முறையீட்டாளருக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

4. கற்றறிந்த தனியமர் நீதியரசரின் உத்தரவால் மனக்குறையுற்று, இதிலுள்ள மேல்முறையீட்டாளர், உரிமைப் பட்டயக் கூறு 15-இன் கீழ் நீதிப்பேராணை மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார், அது எதிர்ப்புக்குள்ளான உத்தரவால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

5. இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 10.04.1997 அன்று ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்குவதற்காக தனது முதல் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார், இது 3-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர் மூலமாக 2-ஆவது எதிர்மேல்முறையீட்டாளரால் அனுப்பப்பட்டது. 26.07.2001 அன்று மேல்முறையீட்டாளரால் பெறப்பட்ட மேற்படி கடிதத்தில், விண்ணப்பம் முறையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும், சான்றிதழ் வழங்குநர்களுள் ஒருவரால் வழங்கப்பட்ட சான்றிதழ் தெளிவற்று இருப்பதாகவும் கண்டறியப்பட்டது. திட்டப்படி, உரிய அதிகாரியிடமிருந்து பெறப்படும் பதிவுரு இல்லாச் சான்றிதழ் (என்.ஏ.ஆர்.சி.) தாக்கல் செய்யப்படவில்லை. 2-ஆவது எதிர்மேல்முறையீட்டாளரால் உறுதியான பரிந்துரை ஏதும் செய்யப்படாததால் 10.04.1997 அன்று 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளராலான விண்ணப்பம் 27.02.2004-ஆம் தேதியிடப்பட்ட அதன் கடிதம் மூலம் முதல்நோக்கிலேயே மேல்முறையீட்டாளரால் நிராகரிக்கப்பட்டது. அதன்பிறகு, சுமார் 13 ஆண்டுகளாக 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை, அவர், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது 05.01.1944-லிருந்து 05.07.1944 வரையிலுமாக 6 மாதங்களுக்கும் மேலாக சிறையில் இருந்ததாகக் கூறி,

ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 2011-ஆம் ஆண்டிலிருந்து ஓய்வூதியம் வழங்குமாறு இங்குள்ள மேல்முறையீட்டாளருக்கு மீண்டும் 29.08.2017 அன்று ஒரு கடிதம் அனுப்பினார்.

6. மேற்படி கடிதத்திற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதும் இல்லாததால் ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டப்படி, தேவைப்படும் அனைத்து விதிமுறைகளையும் பூர்த்திசெய்து கோரிக்கை விண்ணப்பத்தை அனுப்புமாறு, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஒரு நகலுடன், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு முகவரியிட்டு 27.10.2017-ஆம் தேதியிடப்பட்ட ஒரு கடிதத்தை அனுப்பினார் என்பது மேல்முறையீட்டாளரின் வாதமாகும். இக்கட்டத்தில், இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை வழங்குமாறு இங்குள்ள மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிட செயலுறுத்தும் நீதிப்பேராணை மூலமாக பணிக்கக்கூறி மெட்ராஸ் உயர் நீதிமன்றம் (மதுரை அமர்வு) முன்பாக நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

7. மனுவிலுள்ள சாட்டுரைகளை மறுதலிக்க, எதிராணையுறுதி ஆவணத்தை தாக்கல் செய்ய வாய்ப்பு ஏதும் அளிக்காமலும், அறிவிப்பு ஏதும் அளிக்காமலும் நீதிப்பேராணை மனு கேட்கப்பட்டு, 26.10.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் தீர்வு செய்யப்பட்டது என்பது மேல்முறையீட்டாளரின் வாதமாகும்.

8. ஏற்பளிக்கப்பெற்ற சான்றிதழ் வழங்குநரால் வழங்கப்பட்ட சான்றிதழ், ஓய்வூதியம் வழங்குவதற்கு போதுமானது என்ற காண்முடிவைப் பதிவு செய்து, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் அனுப்பப்பட்ட சில கடிதங்களைக் குறிப்பிட்டு, கற்றறிந்த தனியமர் நீதியரசர், ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின்

கீழ் ஓய்வூதியம் வழங்கவும், அது தொடர்பாக உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும் மேல்முறையீட்டாளரைப் பணித்து, மனுவினைத் தீர்வு செய்துள்ளார்.

9. நீதிப்பேராணை மனுவில் அறிவிப்பு ஏதும் அளிக்கப்படவில்லை என்றும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்காக, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு ஆதாரமாக தேவைப்படும் ஆவணங்கள் இல்லை என்றும், ஓய்வூதியம் வழங்குவதற்கான முதல் விண்ணப்பம் நிராகரித்தது குறித்து தெரிவிக்கவில்லை என்றும் கூறி, மற்றவற்றுக்கிடையில், நீதியர் ஈராயம் முன்பாக குறிப்பிட்ட காரணங்கள் மேல்முறையீட்டில் எழுப்பப்பட்டுள்ளபோதிலுங்கூட, உயர் நீதிமன்றம், செல்லத்தக்க காரணங்கள் அளிக்காமலும், மேல்முறையீட்டில் எழுப்பப்பட்ட காரணங்கள் எவற்றையும் பரிசீலிக்காமலும் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்துள்ளது.

10. இந்நீதிமன்றம் முன்பாக, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் எதிராணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரால் செய்யப்பட்ட பல்வேறு சாட்டுரைகளை மறுக்கையில், மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாமல், ஏற்கெனவே அவமதிப்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அவர் அதனைத் தெரிவிக்காமல் சிறப்பு அனுமதி மனுவை, இந்நீதிமன்றம் முன்பாகத் தாக்கல் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டில் சொல்லப்பட்டுள்ள சாட்டுரைகளைப் பொறுத்தவரையில், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வீரமுடன் பங்கெடுத்துக்கொண்டு, அவர் சிறைவாசம் (1944-ஆம் ஆண்டில் 6 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தது மட்டுமின்றி) அனுபவித்தது உட்பட பல இழப்புகளையும், இன்னல்களையும் அடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர் தடுப்புக்காவல் ஆணைகளையும்

எதிர்கொண்டு, *1942*-ஆம் ஆண்டில் *(1942* ஆகஸ்ட் முதல் *1943* டிசம்பர் வரை*)* ஓராண்டுக்கும் மேலாக தலைமறைவாக இருந்தார்.

11. மேலும், அவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றதாலும், அவரது பங்கேற்பின் காரணமாக அவர் தண்டிக்கப்பட்டு, *05.01.1944* முதல் *05.07.1944* வரை ஆறு மாதங்களுக்கும் மேலாக அலிப்புரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. 1997-ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அவரது முதல் விண்ணப்பத்தைக் குறிப்பிடுகையில், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அவ்விண்ணப்பம் மேல்முறையீட்டாளரால் உரிய கவனத்துடன் பரிசீலிக்கப்படவில்லை என்றும், மேல்முறையீட்டாளர், *1*-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கையில், அசட்டை மனப்பான்மையான அணுகுமுறையுடன் நடந்துகொண்டார் என்றும் சாட்டுரைக்கப்-பட்டுள்ளது. அவரது முந்தைய நிராகரிப்பைக் குறிப்பிடுகையில், அவரது முதல் விண்ணப்பத்தின்பேரில் முதல் மேல்முறையீட்டாளரால் செய்யப்பட்ட அத்தகையதொரு நிராகரிப்பு மனம்போனபோக்குடையதோடு, தன்னிச்சையான போக்குமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

13. மேல்முறையீட்டாளரால் அனுப்பப்பட்ட *30.08.2017*-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்திற்குப் பதிலளிக்கையில், திரு. எ.எம். இலட்சுமணன் என்பவரைத் தவிர, மற்ற அனைத்து சுதந்திரப் போராட்ட வீரர்களும் காலமாகிவிட்டனர், இவரது உடன் கைதி சான்றிதழ் திரு. எ.சி. பெரியசாமி என்பவரின் சான்றிதழுடன் ஏற்கெனவே சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, இவ்வாறாக, அவர் இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள அனைத்து செயற்கட்டளைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்ற வகையில் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளில் தலையிட எந்தக் காரணங்களும்

இல்லை என்று கூறி 07.09.2017-ஆம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக அவர் பதிலளித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

14. நாங்கள் இந்திய ஒன்றியத்திற்காக முன்னிலையான கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்குரைஞர் திருமதி/செல்வி மாதவி திவான் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்/நீதிப்பேராணை மனுதாரருக்காக முன்னிலையான வழக்குரைஞர் திரு. திவ்யான்ஷு ஸ்ரீவஸ்தவ் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம்.

15. நீதிப்பேராணை மனுவிலுள்ள சாட்டுரைகளை மறுதலிக்க, எதிர் ஆணையுறுதியாவணம் தாக்கல் செய்யும் வாய்ப்பு எதனையும் வழங்காமலும், அறிவிப்பு ஏதும் அனுப்பாமலும், உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனியமர் நீதியரசர் மனுவினைத் தீர்வு செய்துள்ளார் என்று இந்திய ஒன்றியத்திற்காக முன்னிலையான கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்குரைஞரால் வாதிடப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226-இன் கீழ் நீதிய மறு ஆய்வு அதிகாரங்களைச் செயலுறுத்தும் வகையில் உயர் நீதிமன்றம் ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆக்கப்பூர்வமான உத்தரவுகளைப் பிறப்பிக்குங்கால் தவறிழைத்து-விட்டது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

16. ஓய்வூதியம் சில நிபந்தனைகளுடன் வழங்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளபோது, அந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பது குறித்து உரிய அதிகாரியால் ஆய்வுசெய்யப்பட்டாலன்றி, ஓய்வூதியம் வழங்கப் பணித்து உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடாது என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

17. முதல்படியாக, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 1997-ஆம் ஆண்டில் ஓய்வூதியத்தை வழங்குவதற்காக விண்ணப்பித்துள்ளார் என்றும், அது குறிப்பிட்ட

பரிந்துரைகள் ஏதும் இல்லாமல் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மூலமாக 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டது என்றும், பல ஆண்டுகள் கழிந்தபிறகு, அது நிராகரிக்கப்பட்டுவிட்டது என்றும், மீண்டும் ஓய்வூதியம் வழங்குவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அது உரிய அதிகாரியால் பரிசீலிக்கப்படுவதற்கு முன்பாகவே 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தை அணுகியுள்ளார் என்றும் உயர் நீதிமன்றம் எதிராணையுறுதியாவணம் தாக்கல் செய்ய வாய்ப்பேதும் அளிக்காமல், மனுவைத் தீர்வு செய்துள்ளதென்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

18. இந்த மேல்முறையீடானது பல்வேறு காரணங்களை எழுப்பியுள்ளபோதிலும், நீதியர் ஈராயமும் பரிசீலிக்கத்தவறி, இங்குள்ள மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்ததன் மூலம் கற்றறிந்த தனியமர் நீதயரசரின் உத்தரவை உறுதிசெய்தது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

19. கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதங்களுக்கு ஆதரவாக, **மே.வ. சுதந்திர போராட்ட அமைப்பு -எதிர்- யூனியன் ஆ.ப் இந்தியா மற்றும் பலர்**[1] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையும் மேலும் **யூனியன் ஆ.ப் இந்தியா -எதிர்- பிகாஷ் ஆர். பௌமிக் மற்றும் பலர்**[2] என்ற வழக்கின் தீர்ப்புரையையும் சார்வுற்றார்.

20. அதற்குமாறாக, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான திரு. திவ்யான்ஷு ஸ்ரீவஸ்தவ், மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் செய்யப்பட்ட வாதங்களை மறுத்துரைக்கையில், எதிர்மேல்முறையீட்டாளர்

---

1. 2004 (7) எஸ்.சி.சி. 716
2. 2004 (7) எஸ்.சி.சி. 722

விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து வெள்ளையேனே வெளியேறு இயக்கத்தின்போது அவர் சிறைவாசமும், இழப்புகளை சந்தித்ததோடு, தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி அவருக்கு உரித்தான ஓய்வூதியத்தை நேர்மையற்ற முறையில் இழந்துவிட்டதாக வாதுரைத்துள்ளார்.

21. சிறப்பு அனுமதி மனு *(உ)* எண் *11132/2019 (*வழக்கு குறிப்பேடு எண் *2923/2019)*-இல் பிறப்பிக்கப்பட்ட *26.04.2019*-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவுக்கு எங்களது கவனத்தை ஈர்த்து, இதேபோன்றதொரு மனு இந்நீதிமன்றத்தால் ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் கற்றறிந்த வழக்குரைஞர், **யூனியன் ஆ.ஃப் இந்தியா -எதிர்- சீதாகாந்த் எஸ். துபாஷி மற்றும் ஒருவர்**[3] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மீது சார்வுற்று, உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் சட்டமுறைகேடு ஏதும் இல்லையென்றும், அதில் தலையிடக் காரணங்கள் ஏதும் இல்லையென்றும் வாதிட்டுள்ளார்.

22. மேலும், ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள், ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின்படி, ஓய்வூதியம் வழங்குவதற்கு போதுமானவை என்றும், ஓய்வூதியம் வழங்குவதற்கான அவரது விண்ணப்பத்தை மேல்முறையீட்டாளர் பரிசீலிக்காததால், உயர் நீதிமன்ற கற்றறிந்த தனியமர் நீதியரசர் ஓய்வூதியம் வழங்குவதற்கான உத்தரவுகளைச் சரியாகவே பிறப்பித்துள்ளார் என்றும், அதில் தலையிட காரணங்கள் ஏதும் இல்லையென்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

23. முதலாவதாக, இங்குள்ள *1*-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், *1997*-ஆம் ஆண்டில் ஓய்வூதியம் வழங்குவதற்காக விண்ணப்பித்துள்ளார் என்பதும்,

---

3. 2020 (3) எஸ்.சி.சி. *297*

1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 10.04.1997-ஆம் தேதியிடப்பட்ட விண்ணப்பம், பதிவேடாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் மறுத்துரைக்கப்படவில்லை. மேற்படி விண்ணப்பத்தில், 1942-ஆம் ஆண்டில் நடந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது அதாவது, 1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 6 மாதங்களுக்கும் மேலாக அவர் தலைமறைவாக இருந்தார் என்று 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். அச்சமயத்தில், முதல் விண்ணப்பத்துடன் அரசிடமிருந்து பெறப்பட்ட பதிவுரு இல்லா சான்றிதழ் (என்.ஏ.ஆர்.சி.) முன்னிலைப்படுத்தப்படவில்லை, மேலும், மதுரை முதன்மை நீதித்துறை நடுவரால் சான்றளிக்கப்பட்ட ஒரு சான்றிதழ் மட்டுமே முன்னிலைப்படுத்தப்பட்டது.

24. மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்ட முதலாவது விண்ணப்பம் குறிப்பிட்ட பரிந்துரையேதுமின்றி இருந்தது. 2-ஆவது எதிர்மேல்முறையீட்டாளரிடமிருந்து அக்கடிதத்தைப் பெற்றதன்பேரில், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டது. அவ்வுத்தரவு இறுதியாகிவிட்டதால், அது எதிர்க்கப்படவில்லை. அந்த நிராகரிப்புக்குப் பிறகு, சுமார் 13 ஆண்டுகள் கழித்து, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கத்தில் பங்குகொண்டதற்காக 6 மாதங்களுக்கும் மேலாக அவரது சிறைவாசம் அனுபவித்தது குறித்த வாதத்தின்பேரில், ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 29.08.2017 அன்று மீண்டும் ஓய்வூதியம் கோரியுள்ளார். 2-ஆவது முறையாக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமும் **பிற்சேர்க்கை "பி-5"** என்ற பதிவேடாக முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்தில், அவர் 6 மாதங்களுக்கும் மேலாக அதாவது, 05.01.1944 முதல் 05.07.1947 வரையில் சிறையில் இருந்ததாக தெரிவித்துள்ளார், இது முதல் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள காலத்திலிருந்து

தெளிவாக வேறுபடுகிறது. முந்தைய நிராகரிப்பு இறுதியாகி, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் கோரிக்கையில் கூறப்பட்டுள்ள விவரங்கள் முதலில் குறிப்பிட்ட விவரங்களுடன் மாறுபட்டிருந்தபோதிலும், மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு அனுப்பாமலும், எதிராணையுறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்ய வாய்ப்பளிக்காமலும் கற்றறிந்த தனியமர் நீதியரசர் ஓய்வுதியம் வழங்க ஆக்கப்பூர்வமான உத்தரவு பிறப்பித்து மனுவைத் தீர்வு செய்துள்ளார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் கோரிக்கை, மேல்முறையீட்டாளர்-அரசால் அறிவிக்கப்பட்ட திட்டத்தின்படியானதாகும். கோருரிமையாளர் ஒரு விடுதலைப் போராட்ட வீரராக சிறைச் சென்றதை உறுதிப்படுத்தும் சில ஆவணங்களைத் தாக்கல் செய்ய திட்டம் பரிந்துரைக்கிறது.

25. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணச் சான்று, திட்டத்திற்கு இணக்கமாக இல்லை என்பது மேல்முறையீட்டாளரின் வாதமாகும். இது பரிசீலிப்பதற்கு தகுதியான அதிகாரியிடம் விடப்படவேண்டிய ஒரு வழக்காகும். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ஏற்கெனவே 1997-ஆம் ஆண்டில் நிராகரிக்கப்பட்டுள்ளபோது, அத்தகைய நிராகரிப்பு ஆணை இறுதியானதாகிவிட்டதால், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் ஓய்வுதியம் பெறுவதற்காக இரண்டாவது முறையாக மீண்டும் புதிய விண்ணப்பம் வாயிலாக உரிமைகோருவதற்கு வாய்ப்பில்லை. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தனது கோரிக்கைக்கு உரிய ஆவணத்தை முற்படுத்துவாரேயானால், அவர் இத்திட்டத்தின் பலன்களுக்கு உரிமைபெறுவார். போதுமான சான்றினைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டமே விண்ணப்பத்துடன் சேர்த்து முற்படுத்தப்படவேண்டிய ஆவணங்களைக் குறித்து குறிப்பிடுகிறது. கோருரிமையாளர் அடிப்படை அம்சங்களைப் பூர்த்திசெய்கிறாரா? இல்லையா? என்பதை ஆராயவேண்டியது உரிய அதிகாரமைப்பின் கடமையாகும். நீதிய மறு ஆய்வு

அதிகாரங்களைச் செயலுறுத்தி, உரிய அதிகாரமைப்பால் விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதற்கு முன்பே, உயர் நீதிமன்றம் ஓய்வூதியம் வழங்குவதற்கான எந்த உத்தரவுகளையும் பிறப்பித்திருக்கக்கூடாது. இந்த வழக்கில், முன்னதாக 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டு, அந்த உத்தரவு இறுதியானதாகிவிட்டது என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும். கற்றறிந்த தனியமர் நீதியரசராலும் மற்றும் நீதியர் ஈராயத்தாலும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ஆராய்ந்த பின்னர், ஓய்வூதியம் வழங்குவதற்காக 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு பரிகாரம் வழங்க செல்லத்தக்க காரணங்கள் ஏதும் அளிக்கப்படவில்லை என்பது எங்களுடைய கருத்தாகும். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளர் மற்றும் உயர் நீதிமன்றம் முன்பாக இரண்டாவது முறை விண்ணப்பத்தைத் தாக்கல் செய்கையில், முந்தைய ஆணைகளை முன்னிட்டு செய்யப்பட்ட முந்தைய நிராகரிப்பு குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை எனத் தெரிகிறது.

26. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், இத்தகைய முக்கியமான உண்மைச் சங்கதிகளுடைய பிரச்சினைகள் பரிசீலனைக்காக எழும்போது, உயர் நீதிமன்றம், அறிவிப்பு அனுப்பாமலும், மேல்முறையீட்டாளரால் அளிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுக்க, எதிராணையுறுதியாவணம் தாக்கல் செய்யும் வாய்ப்பினை அளிக்காமலும் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினைத் தீர்வு செய்திருக்கக்கூடாது. **மே.வ. சுதந்திரப் போராட்ட வீரர்களின் அமைப்பு -எதிர்- யூனியன் ஆ.ப்.ப் இந்தியா மற்றும் பலர்**[1] என்ற வழக்கிலும், **யூனியன் ஆ.ப்.ப் இந்தியா -எதிர்- பிகாஷ் ஆர். பௌமிக் மற்றும் பலர்**[2] என்ற வழக்கிலும், கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட இந்நீதிமன்றத் தீர்ப்புரைகள், மேல்முறையீட்டாளரின் வாதத்திற்கு ஆதரவளிக்கும். **மே.வ. சுதந்திர போராட்ட வீரர்களின் அமைப்பு -எதிர்-**

யூனியன் ஆ.ப் இந்தியா மற்றும் பலர் என்ற வழக்கில் உரிய குழு, விண்ணப்பங்கள் தேவைப்படும் ஆவணங்களின்படி உறுதிசெய்யப்பட்டிருக்கவில்லை என்பதைப் பரிசீலித்து, விண்ணப்பத்தை நிராகரித்துள்ளதாகக் கருத்துரைத்துள்ளபோது, இந்த நீதிமன்றம் இதில் தலையிடமுடியாது என்றும், அத்தகைய காண்முடிவுகள் முரணானவை என்றோ, நியாயமற்றவை என்றோ கூறமுடியாது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

27. மேலும், **யூனியன் ஆ.ப் இந்தியா -எதிர்- பிகாஷ் ஆர். பௌமிக் மற்றும் பலர்**[2] என்ற வழக்கில் 1980-ஆம் ஆண்டின் ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம், அத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் சான்றின்படி ஒப்பளிக்கப்பட்டுள்ளதேயன்றி, வேறெந்த முறையிலும் அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. மேற்படி தீர்ப்புரையில், இந்நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மாற்றியமைத்துள்ளது.

28. தற்போதைய வழக்கில், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் 10.04.1997 அன்று சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, அந்த உத்தரவு இறுதியாகிவிட்டது என்றாலும், அவர் மீண்டும் அதே கோரிக்கையுடன் மேல்முறையீட்டாளரை அணுகினார் என்ற காரணத்திற்காக, மேல்முறையீட்டாளர் நல்லதொரு நிலைப்பாட்டை எடுத்துள்ளார். உரிய அதிகாரமைப்பு, விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு முன்பே, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், நீதிப்பேராணை மனுவினைத் தாக்கல் செய்ததன்வாயிலாக உயர் நீதிமன்றத்தை அணுகினார், உயர் நீதிமன்றம் மனுவை ஏற்றுக்கொண்டதோடன்றி, அறிவிப்பு ஏதுமின்றியும், மேல்முறையீட்டாளருக்கு எதிராணையுறுதியாவணம் தாக்கல் செய்யும் வாய்ப்பளிக்காமலும் அதனைத் தீர்வு செய்தது.

29. நாங்கள் நீதியர் ஈராயத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும் ஆராய்ந்திருக்கிறோம். உயர் நீதிமன்ற நீதியர் ஈராயமும், கற்றறிந்த தனியமர் நீதியரசரின் உத்தரவை உறுதிசெய்கையில், மேல்முறையீட்டாளரால் எழுப்பப்பட்ட பல்வேறு காரணங்களைப் பரிசீலித்திருக்கவில்லை.

30. அரசால் வாதிடப்பட்டவாறு, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், திட்டத்தின்படி ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பது உண்மையாக இருந்தாலும், அதேசமயத்தில், 1980-ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ஓய்வூதியத்தைக் கோர, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், தேவைப்படும் சான்றினை, திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அளித்திருக்கவேண்டும். திட்டத்தின் கீழ் உரிமைகோருகிறபோது, ஓய்வூதியம் வழங்குவதற்கான தகுதிக்குரிய அம்சத்தைத் திட்டத்தில் குறிப்பிட்டவாறு, ஒருவர் நிறைவு செய்தாலன்றி, விண்ணப்பதாரர் எவரும் அத்தகைய ஓய்வூதியங்களை ஓர் உரிமைசார்ந்த விடயமாகக் கோரமுடியாது.

31. எதிர்மேல்முறையீட்டாளர்-நீதிப்பேராணை மனுதாரருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், சிறப்பு அனுமதி மனுவை எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்கையில், இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் மீதும், மேலும், இந்நீதிமன்றத்தின் தீர்ப்பை, **யூனியன் ஆ∴ப் இந்தியா -எதிர்- சீதாகாந்த் எஸ். துபாஷி மற்றும் ஒருவர்**[3] என்ற வழக்கில், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புரை மீதும் சார்வுற்றிருந்தபோதிலும், இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவும், மேலும், **யூனியன் ஆ∴ப் இந்தியா -எதிர்- சீதாகாந்த் எஸ். துபாஷி மற்றும் ஒருவர்** என்ற வழக்கின் தீர்ப்புரையும் அவரது கோரிக்கைக்கு ஆதரவாக ஏதும் உதவி புரியாது. ஒரு குறிப்பிட்ட விண்ணப்பதாரர் 1980-ஆம் ஆண்டு ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற உரிமையானவரா? என்பது ஒவ்வொரு

வழக்கின் சங்கதிகளையும், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணச்சான்றுகளையும் கருத்திற்கொண்டு பரிசீலிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும், அவ்வகையில் கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட தீர்ப்புரை அவரது வழக்குக்கு ஆதரவாக எந்த உதவியும் புரியவில்லை.

32. மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களைக் கருத்திற்கொண்டு, நாங்கள் இந்த மேல்முறையீட்டை அனுமதித்து, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் (மதுரை அமர்வு) நீ.பே.மே. (எம்.டி.) எண் 907/2018-இல் பிறப்பிக்கப்பட்ட 29.08.2018-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையை நீக்கறவு செய்கிறோம், இதன்விளைவாக, நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 17290/2017-இல் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு செலவுத்தொகைகள் குறித்த உத்தரவு ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி

புது தில்லி,

22.02.2021.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."